**சிரம வாசனா நிதியம் - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிரம வாசனா நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிதியங்களிலான மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிலையான வைப்புக்கள் வட்டி வருமானம் ரூபா 7,600,124 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், | கடந்த வருடத்தின் பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானத்தை கணிப்பிடும் போது ரூபா 986,473 ஆன வட்டி | வட்டி வருமானத்தினை சரியாக கணக்கு வைத்து, உரிய பட்டோலைகளுடன் இணக்கம் செய்யப்பட்டு உரிய முறையில் திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பட்டோலைகளின் பிரகாரம் வட்டி வருமானம் ரூபா 8,591,293 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானத்தில் பட்டோலை மற்றும் நிதிக்கூற்றுக்களிடையே ரூபா 991,169 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வருமானம் மிகையாக கணிப்பிடப்பட்டிருந்தது. இதன் காரணத்தால் 2020 சனவர் 01ஆந் திகதியில் உள்ளபடியான திரண்ட நிதியத்தின் மீதிக்கு அந்த அளவினால் கூடுதலாக பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வருடத்தில் ஆண்டுக்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் பெற வேண்டிய கணக்குகளினுள்ளேயே பெற்றுக்கொள்ளப்படுவதனால் மேற்படி கூடுதலாக கணிப்பீடு அந்த கணக்குகளினுள் சீராக்கம் செய்யப்பட்டு, ஆண்டிற்கான இலாபத்திலிருந்து குறைவடைந்திருந்தது. எனினும், ஆண்டின் இறுதியில் திரண்ட நிதியத்தின் மீதி நிதிக்கூற்றுக்களில் சரியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது முதலீடு செய்யப்பட்ட ரூபா 5 மில்லியனான நிலையான வைப்பொன்றுக்காக பெற வேண்டிய வட்டியான ரூபா 129,808 தொகை தவறாக கணிப்பிடப்பட்டமையால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒவ்வொரு முதலீடுகள் தொடர்பிலும் தனித்தனியாக வட்டி கணிப்பிடப்பட்டு, வருடாந்த வருமானம் கணிப்பிடப்பட வேண்டியமை. |
| (இ) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான அரச மானியங்களாக நிதியத்திற்கு சாட்டப்பட்ட ரூபா 3,625,500 பெறுமதியான நிலையான வைப்புக்கள் மற்றும் நிதியத்தினால் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட மற்றும் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட ரூபா 2,774,958 பெறுமதியான வலையமைப்புக் கட்டமைப்பு (web based system) எனும் பெயருடைய மென்பொருள் இனங்காணப்பட்ட சதவீதத்தின் அடிப்படையில் காலக்கழிவு செய்வதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முதலீடொன்றாக இனங்காணப்பட்ட வலைதளத்தினை அடிப்படையாக கொண்ட கட்டமைப்பின் பெறுமதி எதிர்வரும் கணக்காண்டுகளினுள் வருமான சதவீதத்திற்கு இனங்காணப்படும் காலப்பகுதியினுள் காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்புலச் சொத்துக்களை காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1998 இன் 12ஆம் இலக்க சிரம வாசினா நிதி அதிகாரச்சட்டம் மற்றும் 2019இன் 15ஆம் இலக்க சிரம வாசனா நிதிய (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டம் | | | |
| (i) திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 3 (3)(எ)(i) மற்றும் (ii) உப பிரிவுகள் | தொழில் ஆணையாளர் நாயகம், தொழில் நியாயச் சபையொன்று, பிணக்கு தீர்ப்பாளர் ஒருவர் அல்லது தொழில் நீதிமன்றமொன்று அல்லது நீதிமன்றமொன்று எதிர்காலத்தில் ஏதேனும் எழுத்துமூல ஏற்பாட்டின் கீழ் சாட்டப்பட்டுள்ள அல்லது விசாரிக்கப்பட்டவாறுள்ள ஏதேனும் பணியாளர் ஒருவரின் பணி நீக்கம் மல்லது அதனுடள் தொடர்புடைய தொழில் தகராறு தொடர்பான வழக்கு நடவடிக்கைக்காக பணியாளர்களுக்கு சட்டரீதியாக நிவாரணத்தை வழங்குவதற்கு, நிதி ரீதியான நிவாரணத்தை வழங்குவதற்கு, அமைய அடிப்படையில் உருவாக்கப்படும் விதிகளால் சபையினால் தீர்மானிக்கப்படும் ஒரு தொகைக்கு இணங்க வேண்டிய போதிலும், இந்த சட்ட உதவி வழங்குவதற்குரிய விதி 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு தேவையான அறிவுரைகள் பெற்றுக்கொண்டு மேலதிக பணிகளை முன்னெடுப்பதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அதில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட உதவிச் சேவைகளை பணியாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 5 (1) மற்றும் (2) உப பிரிவுகள் | நிதியம் மற்றும் லொத்தர் சபையின் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்ற எண்ணிக்கையான லொத்தர் சீட்டுக்கள், லொத்தர் வகைகள் மற்றும் அவ்வாறு நடாத்தப்படும் சீட்டிழுப்புகளில் வழங்கப்படும் பரிசுகள் தொடர்பில், அந்த லொத்தர்களின் உரித்து கோரப்படாத பரிசுகள் தொடர்பில் செயற்படும் விதம் தொடர்பில் மற்றும் லொத்தர் சீட்டுக்களிலிருந்து கிடைக்கும் பணத்தில் நிதியத்திற்காக ஒதுக்கப்பட வேண்டிய தொகை தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டிய போதிலும், நிதியம் மற்றும் தேசிய லொத்தர் சபை ஆகியவற்றுக்கிடையே அவ்வாறானதொரு இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. | சிரம வாசனா நிதியம் மற்றும் தேசிய லொத்தர் சபையுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட வேண்டிய உடன்படிக்கை நிதி அமைச்சிற்கு அனுப்பப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டதுடன், உடன்படிக்கையின் வரைபொன்று தொழில் அமைச்சு பரிந்துரைத்துள்ளதுடன், 2017/01/17 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2017/02/28 ஆந் திகதி முன்னாள் தொழில் அமைச்சின் செயலாளரினால் இது தொடர்பில் குறிப்பிட்டு நிதி அமைச்சின் செயலாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது. மீண்டும், 2020/01/07ஆந் திகதி இது தொடர்பில் குறிப்பிட்டு நினைவுறுத்தல் கடிதங்களும் அனுப்பப்பட்டது. 2021/03/25 ஆந் திகதி நிதி அமைச்சுடன் கலந்துரையாடலொன்று மேற்கொள்வதற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தின ஏற்பாடுகளுக்கமைய லொத்தர் சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு லொத்தர் சீட்டிழுப்பினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (iii) | நிதி அதிகாரச்சட்டத்தின் 14ஆம் பிரிவு மற்றும் திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 6(2) உப பிரிவு | சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பில் அமுலிலுள்ள அல்லது அதனுடன் தொடர்புடைய அல்லது அதனுடன் இணைந்த விடயங்கள் தொடர்பில் அல்லது இந்த அதிகாரச்சட்டத்தின் ஊடாக விதிகளை உருவாக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அல்லது தேவைப்படும் என சபை கருதும் விதிகள் | குழுவொன்றினூடாக விதிகள் வரையப்பட்டு, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று நிதி அமைச்சிற்கு வர்த்தமமானியில் வெளியிடுவதற்குரிய பணிகளுக்காக 2020/12/22 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பில் 2021/03/25ஆந் திகதியும் மீள விசாரிக்கப்பட்டதுடன், அதற்காக உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட்டு உரிய விதிகளை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டு நிதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த விதிகள் 2021 ஏப்ரல் 08ஆந் திகதி வரையிலும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16:2ஆம் பிரிவு | வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டியமை. |

## 1.7 முதலீட்டு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் செயற்பாட்டு பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக தக்கவைக்க வேண்டிய வங்கி மீதி இனங்காணப்பட்டு, மிகைப் பணத்தை குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தும் நடைமுறையொன்று இனங்காணப்பட்டிருக்காத காரணத்தால், மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் ரூபா 2 மில்லியனிலிருந்து ரூபா 14 மில்லியன் வரையிலுமான பணம் நடைமுறைக் கணக்கில் விளைவற்ற விதத்தில் காணப்பட்டது. அதன் மூலம் நிதியத்திற்கு ஈட்டக்கூடிய வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சிரம வாசனா நிதியத்தின் பணிப்பாளர் சபையினால் வார இறுதி நாட்களில் மாத்திரம் REPO ஆக குறுங்கால முதலீடுகள் மேற்கொள்ளப்படும். 2020 யூலை 31ஆந் திகதி காணப்பட்ட ரூபா 12,959,389 ஆன மீதி COVID-19 விசேட செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்த வேண்டியமையால், ஒரு வார காலமாக வைக்கப்பட்டு 2020 ஆகஸ்ட் 30ஆந் திகதி REPO ஆக முதலீடு செய்யப்பட்டது. 2020.11.30ஆந் திகதிய நடைமுறைக் கணக்கின் மீதியான ரூபா 6,561,866 ஆன தொகை 2020.12.02ஆந் திகதி புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டது. | வங்கி மீதியை இனங்கண்டு மிகையான தொகையை குறுங்கால முதலீட்டு முறையொன்றில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 03 அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 95,000,000 ஆன நிலையான | 2020/03/18 ஆந் திகதி முதல் கொரோனா தொற்றுநோய் காலப்பகுதியினுள் நிலையான வைப்புக்கள் | மிகவும் இலாபகரமான நிறுவனங்களின் முதலீட்டுச் சந்தர்ப்பங்கள் தொடர்பில் கண்டறிந்து முதலீடு செய்ய |

| | | |
|---|---|---|
| வைப்புக்கள் முதிர்வடைந்திருந்ததுடன், மீள முதலீடு செய்யும் போது வட்டி வீதத்தினை ஒப்பிட்டுப் பார்த்து மிகவும் இலாபகரமான முதலீட்டு மார்க்கங்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முதிர்வடையும் போது அரச வங்கிகளின் ஊடாக வட்டி வீத அழைப்பினை மேற்கொள்ள முடியாத நிலையொன்று உருவாகியிருந்தது. அதன் காரணமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் நிலையான வைப்பு காணப்படும் வங்கியிலேயே மீள முதலீடு செய்யப்பட்டிருந்தது. சிரம வாசனா நிதியத்தின் நிலையான வைப்புக்களினுள் ரூபா 83 மில்லியன் அப்போது உயர் வட்டி வீதம் நிலவிய மக்கள் வங்கியிலேயே மீள முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் ஒவ்வொரு வருடமும் வட்டி வீத அழைப்பினை மேற்கொண்டு, உயர் வட்டி வீதத்தினை கொண்ட வங்கியில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு பெறுபேறு ரூபா 12,330,517 ஆன மிகையாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 21,832,739 ஆகும். அதன் பிரகாரம், நிதி விளைவுகளில் ரூபா 9,502,222 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கடந்த வருடத்தின் ரூபா 73.2 மில்லியனாக காணப்பட்ட நிதியத்தின் வருமானம் மீளாய்வாண்டினுள் ரூபா 37.8 மில்லியன் வரை குறைவடைவதற்கு காரணமாக காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

(அ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது சிரம வாசனா லொத்தர் வருமானம் ரூபா 60.2 மில்லியனிலிருந்து ரூபா 30 மில்லியன் வரையிலும், 50 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) எதிர்பார்த்தவாறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமையால் ஆண்டுக்கான மூலதனச் செலவினம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக 75 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020ஆம் ஆண்டுக்குரிய உள்ளக கணக்காய்வு திட்டமொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. மேலும், 2020 மார்ச் மாதத்தின் பின்னர் நிதியத்தின் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக காணப்பட்டது. | சிரம வாசனா நிதியத்தின் வெற்றிடமாக காணப்பட்ட உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு புதிய உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு 2020/10/19 ஆந் திகதி நிதி அமைச்சிடம் கோரப்பட்டிருந்ததுடன், துரிதமாக நியமிப்பதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்படுவதாக எமக்கு அறிவிக்கப்பட்டது. | உள்ளக கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியமை மற்றும் வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) COVID - 19 காரணமாக வேலைவாய்ப்பினை இழந்த பணியாளர்களின் சுமார் 2,500 பிள்ளைகளுக்காக பாடசாலை பைகள் மற்றும் பாடசாலை உபகரணப் பொதிகளை வழங்குவதற்கு ரூபா 6,250,000 ஆன மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு, 11 தொழில் அதிகாரப் பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் தொழில் ஆணையாளர் நாயகத்தினால் தேவையான தகவல்கள் மற்றும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம், 2020 திசெம்பர் 31ஆந் திகதியளவில் சுமார் 330 இற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. சமூக பொறுப்பினை | COVID - 19 காரணமாக வேலைவாய்ப்பினை இழந்த பணியாளர்களின் சுமார் 2,500 பிள்ளைகளுக்காக பாடசாலை பைகள் மற்றும் பாடசாலை உபகரணப் பொதிகளை வழங்குவதற்கு தேவையான தகவல்கள் கோரப்பட்டிருந்த போதமிலும், பணிப்பாளர் சபையின் அறிவுரைக்கமைய அந்த நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படவில்லை. | சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன், காலத்திற்கு ஏற்ற தேவைப்பாடுகளுக்கமைய முறையான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றுதல் காலத்தின் தேவைப்பாடாவதுடன், அதிகாரச்சட்டத்தின் 6(உ) உப பிரிவின் நோக்கங்களுக்கு மிகவும் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமான போதிலும், 2021 மார்ச் 15அந் திகதி வரையிலும் அந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக் கவில்லை. | | |
| (ஆ) | பணியாளர்களின் நலனோம்புகைக்காக உன்னத சேவையாற்றியுள்ள நபர்களை பாராட்டும் விழாவொன்றினை நடாத்துவதற்காக 2017 ஆகஸ்ட் 15ஆந் திகதி குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடடன், குறித்த குழுவின் அறிக்கை 6 மாதங்கள் தாமதமாகியிருந்தது. பணிப்பாளர் சபையினால் முன்னர் தீர்மானிக்கப்பட்டவாறு 03 பணியாளர்கள், 04 தொழில்தருநர்கள் மற்றும் 03 அரச முகவர்கள் எனுமாறு முத்தரப்பினரும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 10 நபர்களை தெரிவு செய்ய வேண்டிய போதிலும், நியமிக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தவாறு, தொழிற்சங்க நடவடிக்கைகளில் 35 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் ஈடுட்டிருந்த 10 நபர்கள் மாத்திரம் பத்திரிக்கை அறிவித்தலொன்று பிரசுரிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். எவ்வாறான போதிலும், 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் இந்த விழாவிற்கான முன் காணொளிப் பதிவு, பத்திரிக்கை அறிவித்தல், குழு அங்கத்தவர் படிகள் | சனாதிபதியின் தலைமையில் மேற்படி உற்சவத்தினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், முழு நிகழ்ச்சித்திட்டத்திற்காகவும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. விழாவினை நடாத்துவதற்குரிய ஆரம்ப பணிகளுக்காக இந்த பணம் செலவிடப்பட்டுள்ளது. இந்த செலவினம் மேற்கொள்ளப்பட்டு தயாரிக்கப்பட்ட காணொளியை எதிர்வரும் விழாக்களில் பயன்படுத்துவதற்கு நிமித்தமாக உள்ளமையால் செலவிடப்பட்டுள்ள பணம் வீணடிக்கப்பட்டிருக்கவில்லை. | செலவின மதிப்பீடுகளை தயாரித்து உரிய அங்கீகாரத்தினை பெற்று விழாவினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடங்களான ஆரம்ப செலவினங்களுக்காக ரூபா 708,897 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2021 மார்ச் 15ஆந் திகதி வரையிலும் அவ்வாறான எவ்வித விழாவும் இடம்பெற்றிருக்கவில்லை. | | |
| (இ) | 2016ஆம் ஆண்டுக்கு முன்னர் நிகழ்ச்சித்திட்டங்களில் பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 60,464 பெறுமதியான உபகரணங்களின் 10 இருப்பு உருப்படிகள் 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் அசைவுறாத இருப்பு உருப்படியொன்றாக களஞ்சியத்தில் காணப்பட்டது. | இதற்கு முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய இந்த இருப்பு இவ்வாறு எஞ்சியுள்ள போதிலும், தற்போது இந்த இருப்பு நடைமுறையிலுள்ள நிகழ்ச்சித்திட்டங்களில் வழங்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய தொகை தம்புள்ளையில் இடம்பெற்ற நிகழ்ச்சித்திட்டத்திற்காக வெளியிடப்பட்டது. | அசைவுறாத இருப்புக்கள் குறித்த அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்ட பின்னர் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அல்றது வேறு ஏதேனும் முறையில் கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |